ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீச்வராய நம:

ஆர்ய தர்மம்.

எந்த காரியங்களுக்கும் காலம் அங்கமாகாமலிருப்பதில்லை. அதுபோல் வைதிக கர்மங்களுக்கும் காலம் அங்கமாகிறது. ஆனால் மற்ற அங்கங்களைவிட காலம் முக்கியமான அங்கமாம். மற்ற அங்கங்களுக்கு பதிலாக வேறு சாதனங்கள் வைத்துக் கொள்ளலாம். காலத்திற்கு மாறுதல் கிடையாது. அதனால் எந்த காலத்தில் எந்த காரியம் செய்யப்படவேண்டியதாக விதிக்கப்படுகின்றதோ, அந்தகாலத்திலேதான் அவைகளைச் செய்யவேண்டும். சில காரியங்கள் ஒரே நாளிலேயே ஆரம்பித்து முடித்து விடும்படியாக விதிக்கப்படுகின்றன. சில காரியங்கள் ஒரு தினத்தில் ஆரம்பித்து வேறு தினத்தில் ஸமாப்தி செய்யவேண்டியதாக விதிக்கப்படுகின்றன. அவைகளை அப்படியேதான் செய்யவேண்டும். நான்கு நாளில் செய்யவேண்டியகாக விதிக்கப்பட்ட காரியங்களை வேறுலௌகிக காரியங்களுக்காக ஒரே தினத்தில்செய்து முடித்துவிடுவது தகாதகாரியம். லௌகிக காரியங்களிலும் இந்த நியாயம் ஒத்துவரும், அப்படி குறிப்பிட்ட காலத்தில் ஆரம்பித்து முடிக்கப்படாத காரியங்களுக்கு பயனும் பூர்ணமாகக் கிடைக்காது. அதனால் தற்காலத்தில் சிலர் வைதிக காரியங்களை காலந்தவறிச் செய்துவிட்டு அதன் பயன்மட்டிலும் ஒழுங்காய் வரவில்லையேயென்று வைதிக கர்மங்களில் அசிரத்தை கொள்ளுகிறார்கள். சிலர் கைகண்டபலனைப் உடனுக்குடனே கிடைக்கவில்லையேயென்று வைதிக் கர்மங்களை வீணென்றே நினைக்கிறார்கள். அது சரியன்று. கிருஷி முதலிய லௌகிக காரியங்களில் உடனுக்குடனே பலன் கிடைத்துவிடுமா. விரைவிட்ட அன்றிக்கே வரவேண்டிய தானியங்கள் வந்துவிடுமா. அதற்குள்ள காலக்கிரமத்திற்றானே அவை பயனையளிக்கும். இந்த நியாயம் வைதிக காரியங்களிலுமில்லையா. ஆயுஸுக்குப் பிறகே கிடைக்கவேண்டிய பலன்களுக்காக பிராணிகள் பிரவிருத்திக்கவில்லையா. இவ்விஷயத்தில் மரணபண்டு போடுகிறவர்கள் உதாஹரணமாவார்கள். பின்னிட்டு புத்திரர்களுக்காவது அது கிடைக்குமென்று நம்பித்தானே அவ்விதம் செய்கிறார்கள். அதுபோல் வைதிக கர்மங்களிலும் முன்பத்து தலைமுறை பின்பத்து தலைமுறைதானுள்பட 21தலைமுறை பலனைத்தரக்கூடிய அநேக காரியங்கள் நம்முடைய வைதிகவழியில் விதிக்கப்படுவதை இவையும் பயனைத்தரக்கூடியவையென்று என் நம்பக்கூடாது. இவைகளை நம்பித்தான் நம்முன்னோர்கள் நல்லபயனையனுபவித்தார்கள். அதுபோல் யாவரும் நம்பி சரிவர நடத்தி ஸகலசிரேயஸ்ஸை அடைவார்களாக.

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-௵ மார்கழி௴ ௩௨

கலி கலியாண கோலாஹலம்.

இஹத்திலும் பரத்திலும் எல்லோரும் ஸந்தோஷப்பட வேண்டுமென்றே விதிக்கப்பட்ட கலியாணங்களில் காலபேதத்தால் காசுச் சிலவை க்கணக்கில்லாமலிழுத்து விட்டுக் கொண்டுக் கஷ்டப்படுகிறார்கள் அதுவே நாகரீக மென்றும் சிலபேர்கொண்ட கூற்று. சின்னாட்களாக பலபுத்திமான்கள் கூடிகாசைக்குறைக்க வழி தேடி வைதிகவிஷயத்தைக் குறைக்க முடிவுக்கு வந்தார்கள். இவ்விஷயத்தில் எமக்கு ஓர்புறம்ஸந்தோஷத்தையும் மற்றோர்புறம் துயரத்தையும் விளைவிக்கின்றது. அதிலுள்ள ஸந்தோஷத்தை மட்டில் முன்னர் நிரூபித்துப் பின்னர் மற்றதைக் காட்டுவாம். அதாவது கலியாணம் நான்கு நாள் செய்ய வேண்டிய காரியமாக விதிக்கப்படுகின்றது. நான்காவது தினம் பின்னிரவில் சேஷ ஹோமம் செய்த பிறகுதான் விவாஹம் பூர்த்தியடைகிறது. நான்குநாள் செய்தால் செலவதிகமாய் விடுகிறதென்று சிலர் ஒரே நாளில் விவாஹத்தை முடிக்கும் குறுக்கு வழியைக் கண்டுபிடித்தார்கள். அவைதவைதிகர்கள் அங்கீகரிக்க மாட்டார்களென தேவதாபக்தியை யபிநயித்து க்ஷேத்திரவைபவத்தால் எல்லாம்ஸரியாய் விடுமென்று க்ஷேத்திரபக்தர்களுக்குப்புகட்டினார்கள். அது அவர்களிடம் வேரூன்றி மற்றவிடங்களிலும் வியாபித்துவிட்டது. இப்பாதகண்டத்தில் பிரஸித்தமான க்ஷேத்திரம்திருப்பதியென்று அறியாதார்யாருமில்லை. அவ்விடத்தில் இப்பொழுது நடப்பதே ஈண்டு விரிக்கற்பாலது' அதன் முறை இது. கலியாணக்காரர் கல்லியாணத்தன்று காலை ரெயில் வண்டியில் அந்த க்ஷேத்திரம்வந்திறங்கி அதற்காக என்றேற்படுத்தப்பட்ட ஸ்தானம் போய்சேருவார். அங்குள்ள கடைக்காரச் செட்டி கல்லியாணத்திற்கு வேண்டிய அவசிய ஸாமக்ரியைகளை விற்கின்றான், அங்குவேண்டியதை வாங்கிக்கொள்வார்கள்' அங்கு வாத்தியக்காரர் மூவர். அவர் காலைத்

தொழிலைச் செய்து கொண்டு வாத்திய ஸஹிதம் ஸந்தத்தமா யிருப்பார். ஓர் புரோஹிதர் ஓர் மூலையில் கொஞ்சமக்கினியை யுண்டாக்கி உடனே ஸங்கிரஹமாய் ஏதோ சில ஹோமம் செய் வார். உடனே வரன் பெண் கழுத்தில் தாலியைக் கட்டுவான். உடனே போஜனம். மலையின் மீதுள்ள ஸ்ரீவெங்கடாசலபதிஸ்வா மியை மனதாலேயே பூஜித்துவிட்டு மாலை வண்டிக்குஊருக்குப் பிரயாணமாவார்கள். கல்யாண விஷயமாய் மூன்று மணிக்கு மேலங்கிருக்க நேரிடுகிறதில்லை. சிலர் ஒரு தினம் உல்லாஸமா யுமிருப்பதுண்டு. இப்படியே ஒரு தினத்தில் 10 அல்லது 12 விவாஹங்களும் உபநயனங்களும் நடக்கின்றன. இது ஓர் விதத் தில் சிலவைக் குறைக்கும் உபாயமாகலாம். எப்படியெனில் இக் கல்யாணத்தில் பந்தற்சிலவு, பல்லக்கு மோட்டார் வாடகை, மணமகன் வரவேற்பு மரியாதை, தீவட்டிச்சிலவு. வாணவித்தை, ஊர்வலவிலாஸம், பந்துக்களின் போஜனம், வாத்தியக்கூலி, தாஸீ ஸதிர், பாட்டுக்கச்சேரி. மத்தியஸ்தர் லஞ்சம், பார்ப்பனர் பூரி, காப்பிக்குடி, சீட்டாட்டக்களி முதலிய பல சிலவுகள் குறைகின் றன. விசாரித்தால் கன்னியாதானம் செய்பவர் தம்பதியாயிருந் தாலிருவர். வாங்கும் வரனொருவன், கன்னிகை, புரோஹிதன் ஆக ஐவரே அங்குள்ளவர். அதிகமாயிருப்பவன் ஸ்ரீ ஹரியே. இதிலதிகச்சிலவேது. இம்மட்டில் ஸந்தோஷந்தான். இவ்விவா ஹத்தில் இக்கலிகால கோலாஹலத்தால் விளைந்த விபத்துக்களில் ஒன்றான வீண் சிலவுயில்லையல்லவா. இக்கலியாணத்திலுள்ள அனர்த்தம் வேறு வகையில்லைகின்றது. அதாவது இங்கு கன்னி காதானம் செய்பவனது அக்கினியைப்பற்றி கவனிக்கவேண்டியே வருகிறதில்லை. கன்னிகையைத்தானஞ்செய்யும் முகூர்த்தத்திற் றானே எல்லா கர்மங்களும் முடிகின்றன. நான்காம் தினத்தில் இரவு பிற்பகுதியில் செய்யவேண்டிய சேஷ ஹோமம்வரை அந்த க்ஷணத்திலேயே ஆகர்ஷித்து செய்யப்படுகின்றது. அதில் கர்ம பூர்த்தியாவது கடினம். இதிலோர் சாஸ்திர பண்டிதனின் குயுக்தி ஸப்தபதியானவுடன் பர்த்தாவுக்காவது பத்நிக்காவது மரணம் ஸம்பவித்தால் அவ்வித ஸம்பவத்தில் நாலுநாள் கிரியையும் உட னே செய்துவிடும்படி விதிக்கப்பட்டிருக்கின்றதல்லவா. இந்த ஸந்தர்ப்பத்தில் விவாஹகாரியம் பூர்த்தியானதாகத்தானே கொள் ளப்படுகிறது. இதுபோலவே இந்த ஒருநாள் விவாஹமும் என்

பூர்த்தியடையாது. இந்த குயுக்தி கேட்பவர்களுக்குச் சரீயாய் தோன்றுகிறதா. இவ்விவாஹத்தில் சாகாபேதம், ஸூத்திரபேதம் இதுபோன்ற எவ்வித வைதிக அம்சமும் கவனிக்க நேருவதில்லை. இது இப்படியிருக்க இந்த க்ஷணிக விவாஹம் எப்படி பூர்த்தியாகுமோ தெரியவில்லை. இவ்வித விவாஹ முறை எந்த ஸூத்திரங்களிலாவது எந்த புராணத்திலாவது எந்த சிஷ்டாசாரத்திலாவது காணப்பட்டதில்லை. இவ்விதம் ஓர்விவாஹம் செய்யலாமென்று வெங்கடேச மான்மியத்திலுமில்லை. இப்படி திருப்பதியிலுள்ள சிஷ்டர்களும் நடத்தியதில்லை. சிலவைக்குறைப்பதென்ற வியாஜத்தால் வைதிககாரியங்களை முற்றிலும்குறைத்துவிடுகிறார்கள். ஆகையால் வைதிக காரியம் பூர்ணமாகிவிவாஹம் பூர்த்தியாகவேண்டுமானால் அதை நான்கு தினங்களிலேயே செய்யவேண்டும். அதிகச் சிலவாகிறதேயென்றால் அது ஸூத்திரக்காரர் விதித்ததல்ல. ஸூத்திரக்காரர் சொன்னபடிசெய்தால் சிலவுமாகாது. சிரேயஸ்ஸுமுண்டு. அப்படியே யாவரும் செய்து க்ஷேமத்தை அடைவார்களாக.

பத்திராதிபர்.

பிதுரு ச்ராத்த ரஹஸியம்.

ஆஸ்திக சிகாமணிகளே!

பிதுரு சிராத்த விஷயமாகப் பல விபரீத சந்தேகங்களும், அதற்கு தக்கபடியான சமாதானமும் நமது "ஆரியதர்மம்" பத்திரிகை மூலமாக வெளிவந்திருப்பதைக் கண்ணுற்றோம். சிராத்த தர்ம நியமங்களை நன்கு அறிந்திருக்கவேண்டியது ஆஸ்திகர்களின் முக்கிய கடமையாம்.

இவ்விஷயத்தில் சந்தேகிகளும், சாஸ்திரங்களையே நம்பினவர்களைப்போலப் பேசுகிறார்கள். (டவிள்) என்ற தேவதையும் தனது கெட்ட நடத்தைக்கு "வேதத்தையே" பிரமாணமாகச் சொல்வது வழக்கமென்று பழமொழியொன்றுண்டு. இம்மாதிரியான குதர்க்க சந்தேகிகளை சமாதானம் செய்ய ஆஸ்திகர்கள் எவ்வளவு தர்ம்ம நியமங்களை எடுத்துரைத்தாலும் அவைகள் பயன்படமாட்டாது. மனமேஸகலத்திற்கும் காரணம். 'ஞானம்'

என்பது தீபத்தின் ஒளியைப்போலுள்ளதாம், மனதை அதன் வெளியில் வைக்கக்கூடிய ஓர் "சிமினி" போலுள்ளதென்று சொல்லலாம். தீபவொளி நிறபேதமுள்ள சிமினியின் நடுவில் வரும்போது வெளுப்பு, சிகப்பு, கறுப்பு முதலிய சிமினியின் நிறபேதமாகவே வெளியில் காணப்படுகிறது. அதுபோல சுயம் பிரகாச ரூபமான ஞானமும், காமினீ, காஞ்சன மோகத்தால் பல வித கல்மஷத்தை அடைந்தமனமுள்ளவர்களிடத்தில் பற்பல பேதமாகவே காணப்படுவதும் ஸஹஜமே. அதனால் சாஸ்திர விஷயமான சமாதானங்கள் சந்தேகிகளின் மனக்கலக்கத்திற்குத் தக்கபடியே, விபரீதமாக தோன்றும் என்பது மிகையாகாது. இவர்களைச் சீர்திருத்த எண்ணுவது வீணனகாரியமாம். அதர்மி களுக்கு தர்மோபதேசம் செய்வதானது மாத்திஞல் செய்த முளை யைக் கற்பாறையின்மேல் வைத்தடித்தது போல வீணுகும். மாமுளை கற்பாறையினுள்ளில் செல்லாததும் தவிர அதன் முளையும் சிதைந்து பயனற்று போவதுபோல தர்மோபதேசங்க ளும் அதர்மிகளின் காதிற் செல்லாமலும் பயனற்றதாயுமாகும்.

நல்லோர்களின் உபதேசத்தை இழிப்போர்கள் ஒப்புக்கொ ள்ளமாட்டார்கள் என்பது சித்தம். "தேனுடன் நல்ல வாசனை வீசிஞலும் புஷ்பத்தின் தேனை உண்ணப் போகாமல் துற்கந்த மான பொருளையே விரும்பிச்செல்லும் ஓர்சாதி ஈயைப்போல, இழிவான செய்கைகள் நிறைந்த மனமுடையாருக்கும் பெரி யோர்களின் தேன்கலந்த, தர்மோபதேச மொழிகள் சாரமுள்ள தாகமாட்டாது. "வாதரோகத்துக்கு ஒளடதமுண்டு, பிடிவாத ரோகத்துக்கு ஒளடதம் உலகிலில்லை. கருங்கல்லானது எவ்வ ளவு காலம்தண்ணீரில் கிடந்தாலும், அதனுள்ளில் சிறிதும் ஈரம் உண்டாக மாட்டாது" என்பதுபோல, சாஸ்திரசாரம், அஞ்ஞா னிகளின் மனதில் சிறிதும் புலப்படமாட்டாது.

காக்கையை எவ்வளவு உயர்நிலையில் தீனி கொடுத்து வளர் த்து வந்தாலும் மலம் தின்னும் இயற்கைகுணம் அதை விடமாட் டாது சர்க்கரைக் குன்றின் மீதில் பால்வார்த்துப் பயிற்செய் தாலும் வேம்பின் கசப்புக்குணம் மாறமாட்டாது. இயற்கை குணம் மிகவலிமையுள்ளபடியால் சிராத்தவிஷயத்தில் நம்பிக்கை யற்று யுக்தியாக குதர்க்கம் செய்கிறவர்களுக்கு யுக்தியாகவே

சமாதானம்சொல்வது ஒருவாறு உசிதமாகலாமெனக் கருதி எழுதலானோம்.

சாஸ்திராப்பியாசம் பூர்ணமாகச் செய்தவர்களுக்கு ஏன் அனேகமாக ஞானமுண்டாகிறதில்லை? என்று சீடனொருவன் தன் குருவைக் கேட்டான். அதற்கவர் "பருந்தும், கழுகும்" வெகுதூரமான ஆகாய வீதியில் சஞ்சரித்து வந்தபோதிலும், அவைகளின் கண்பார்வையானது பூமியில் மாமிசம் அழுகிக்கிடக்கும் குழிகளிலேயே ஏற்படுவது வழக்கம். அதுபோல சாஸ்திராப்பியாசம் செய்த பண்டிதர்களுடையவும் மனமானது வெகுவாக, காமினீ, காஞ்சனம், இவைகளிலேயே முழுகியிருக்கும். அதனால்தான் சாஸ்திராப்பியாசமுள்ள பலருக்கும் ஞானமுண்டாவதில்லை என்று உபதேசித்தார். "பிதுருசிராத்தத்தால்" முக்கிய பலன்யாதெனில், சுவர்க்கலோகத்தையடைந்தவர்கள். தாம் பூலோகத்திற் செய்த புண்ணியத்தின் பயனாகிய சுகத்தையே அநுபவித்துக்கொண்டிருப்பார்கள். நரகலோகத்தை யடைந்தவர்கள் பாபத்தின்பயனாகிய துக்கத்தையே அநுபவித்துக் கொண்டிருப்பார்கள். அவ்விடங்களில் பாபபுண்ணியங்கள் ஒன்றும் செய்யப்படுவதில்லை. பூவுலகிற் செய்ததின் பலனையே அவ்விடங்களில் அநுபவிக்கவேண்டும். அவ்விதம் அநுபவித்துவரும் போது, பூவுலகில் அவர்களை உத்தேசித்து செய்யப்படுகிற, சிராத்த, தானாதி புண்ணிய கர்மத்தின் பலன்கள் அவர்களையடையும். இதனால் சுவர்க்கலோகத்திலுள்ள முன்னோர்கள் இன்னும்சிறிதுகாலம் அவ்வுலகபோகங்களை அநுபவிப்பார்கள். நரகத்திலுள்ளவர்களுக்கு இதுமிகவும் உபகாரமாக பலிக்கும், எவ்விதமெனில், அவர்கள்பாப பயனையநுபவித்துவரும்போது இப்புண்யபலன்கூடிவரும். அதனால் அவர்களின்பாபம்குறைவுபடும். அப்போது அந்தஆத்மாக்கள், சீக்கிரமாக நரகத்தைவிட்டு நீங்கும். இந்த சிராத்தாதி பிதுருகர்மங்களானது நரகத்திலிருக்கும் பிதுருக்களை விடுவிப்பதற்கும், புண்ணிய உலகில் வசிப்பவர்களின் புண்ணியம் இன்னும் விருத்தியாவதற்கும் மிக முக்கியமாகிறது. "சிரத்தையுடன் செய்வது பற்றியே சிராத்தம்" எனப் பெயர் வந்ததாம்.

இந்த சிராத்த கர்மத்தால் நரகத்திலே இருந்து கடைத்தேற வழியறியாமல் வாதைப்பட்டுதவிக்கும் மூன்றுதலை முறை

யாரைக் காப்பாற்றப்படுகிறது பற்றி இதற்கு அளவற்ற புண்ணிய முண்டென்று புகழப்படுகிறது. இக்கர்மத்தை விட்டவன் கோடி ஜன்மம் சண்டாளனுகிருன் என்று சாஸ்திரம் சாதித்து வருகிறது. இவ்வாறு சிரத்தையுடன் சிராத்தம் செய்தகர்த்தா அடைவ தென்னவெனில் நன்றியறிதல் என்ற பெரும் புண்ணியத்தை யடைகிருன். நன்றிசெய்தவர்களை ஏழுபிறப்பிலும் மறக்கக்கூடா தென்றும் மறந்தாலுள்ள பாபத்திற்குப் பரிஹாரமே இல்லையென் றும் சாஸ்திர சித்தம். இதனுல் நன்றியறிதல் பெரும் புண்ணிய மென்றும் அதைமறந்தால் மகாபாபமென்றும் விளங்கிற்று. தாய் தந்தையரைப் போல உபகாரம் செய்தவர்கள்வேறெருவருமில்லை. இகபரசுக போகங்களையும், மோட்ச சுகத்தையு மடைவதற்கு இம்மானிட சரீரமே முக்கியசாதனம். இம்மானிட சரீரம், மற் றெல்லாப் பிராணி சரீரங்களைவிட மேலானது. இவ்விதமானசரீர உத்பத்திக்குக் காரணர்களும்,பெற்றெடுத்துக்கெடுதலன்றி காத்து உலக அறிவையும், பக்தியையும் கடந்த ஞானத்தையும் புகட்டி வளர்த்து வந்த மாதாபிதாக்களின் உபகாரத்திற்குக் கைமாறு யா தொன்றுமில்லை, அவர்கள் நமது சரீரபோஷணுதிகளைச் செய்யா விடில் இஹபரசுகபோகங்களையடையவழியுமில்லை, யாவற்றிற்கும் முக்கியசாதனம் இச்சரீரமும் அதன் உத்பத்திக்குக் காரணம் மாதா, பிதாக்களுமாம். இவர்கள் பரமோபகாரிகள் என்பதில் தடையில்லை.

ஜன்மம் முதல்மோட்சம் வரை நினைக்கத்தக்க பேருபகாரத் தைச்செய்த மாதா, பிதாக்களை நரகத்தினின்று விடுவிப்பதற்கும் புண்ணிய உலக சுகங்களைப் பெருகச்செய்து அவர்களை மகிழ்விப் பதற்கும் சிராத்த கர்மமானது எவ்வளவு சிறப்புடையதென்று பாருங்கள். நன்றியறிதலாகிய இவ்வுபகாரத்தினுல் அடையப்படும் புண்ணியமும் மிகப்பெரியதேயாம். இதைச்செய்யாதவன் ஆரிய குலத் தோனுகமாட்டான். இவ்வளவு மகிமை இல்லாதவரை இக் கலியிலும் விடாமல் இக்கர்மம் செய்துவர யாதொரு காரணமும் இல்லை.

இவ்விஷயமாக பாரத சரித்திரம் சொல்வது யாதெனில், "அத்திரி மஹரிஷியின்,' புத்திரர் "தாத்திரேயர்" அவர் புத்திரர் 'நிமி'. நிமிக்கு "ஸ்ரீமான்" என்ற புத்திரன் பிறந்தான். இவர்ஆயி ரம் வருடம் சென்றபின் காலகதியை அடைந்தார். அதனுல் துக்

கமிருந்த ‘நிமி’ தன் புத்திரனுக்கு நன்மை செய்யக்கருதி வெகு நாள் ஆராய்ந்து “கிருஷ்ண சதுர்தசி”யன்று தூக்கமின்றி யோசித்து சிராத்தம் செய்யும் முறையை தீர்மானித்துக் கொண்டார். மறுநாள் “அமாவாசை”யன்று தன் புத்திரனுக்கு பிரியமான கனி கிழங்குகளைக்கொண்டு பக்குவம் செய்து சிறந்த பிராமணர்களை வரவழைத்து சிராத்த போஜனம் செய்வித்து திருப்திபெறச் செய்தார். அப்போது உப்பில்லாத சாமை அரிசி அன்னமே போடப்பட்டடது. அதன் பிறகு தெற்கு நுனியாக தற்பையைப் போட்டு அதில் பிண்டதானமும் செய்தார். அதனுல் அவருக்கு மகிழ்சியுண்டாயிற்று. பிறகுதான் செய்த கர்ம்மம் தர்ம்மமோ, அதர்மமோவென்று கவலையடைந்து தனது குலோத்தமரான “அத்ரி” முனிவரை சிந்திக்க அவர்வந்து “நிமிக்கு” ஆறுதல்சொல்லி நீ செய்த “சிராத்த கர்ம்மம்” எனக்குச்சம்மதமே. ஆதிகாலத்தில் பிரும்மதேவன் இந்த தர்மத்தை நியமித்திருக்கிறார். அவருல் ஏற்படுத்தப்பட்டிருக்கிற தர்ம்மவிதியையே நீ அநுசரித்தாய், துக்கப்படவேண்டாமென்று சமாதானம் செய்து சென்ருர். சிராத்தம் செய்தால் பிரட்தியட்சத்தில் அதன் பலன் அறியப்படாததால் அனுவசியமென நவீன மேதாவிகளின் அபிப்பிராயம். சிராத்த கர்மமம், சிரத்தை, விசுவாசம், இவைகளைப் பொறுத்ததாம். விசுவாசத்துக்கு பிரத்தியட்சபிரமாணம் தேவையில்லை,

விசுவாசமில்லாதவர்கள் பிரத்தியட்சத்தில் விசுவாச யோக்கியமான தத்துவங்களைக் கண்டாலும் விசுவாச மடையமாட்டார்கள் என்பது உண்மை. “பகவானுடைய விசுவரூபத்தை” துரியோதனனும், அர்ச்சுனனும கண்டார்கள். அர்ச்சுனனுக்கு இதனுல் பகவானிடம் அதிக விசுவாசம் ஏற்பட்டது.

துரியோதனனுக்கு விசுவாசத்திற்கு பதிலாக இந்திர ஜாலமிதுவென்றும் பகவானிடம் அவிசுவாசம் மிகவுண்டாச்சுது. இதனுல் பிரட்திட்சானுபவத்தால் விசுவாசம் பிறந்து விடுமென்பது நிச்சயமில்லை. இரண்டும் உண்டாகலாம். விசுவாச முள்ளவனுக்கு பிரத்தியட்ச அநுபவமில்லாவிடினும் விசுவாசம் ஸ்வயமாகவே ஏற்படுவது சகஜம்தான். இதற்கு “ஹநுமான், விபீஷணன், துருவன், பிருக்லாதன், த்ரௌபதி” இவர்களே அத்தாட்சி ஆவார்கள்.

சிராத்தத்தில் புதிதான ரகசிய சந்தேகமென்னவெனில் மாணமடைந்தவர்களுக்கு இப்புவியில் சிராத்தமென்று ஒன்று இரண்டு, பிராமணர்களுக்கு போஜனம் செய்வித்தால் நம்முன்னோர்கள் எவ்விதம் திருப்தியடைவார்கள். தவிர மனிதன் மரித்தபிறகு அவனுக்கு அடுத்த ஜன்மம் மனிதஜன்மம்தானென்று எவ்விதம் சொல்லலாம், மரித்தவன் செய்தது பாபமானுல் அதற்குத் தக்கபடிகெட்ட ஜன்மம் வருமென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. நமது பிதா கெட்ட கர்மம் செய்ததின் பயனுக சர்ப்ப ஜன்மம் அடைந்திருந்தால் நாம் பிராம்மணனுக்கு அன்னத்தைக் கொடுத்தால் சர்ப்ப ரூபமான நம் பிதாவிற்கு தவளைரூபமான ஆகாரமாக எவ்விதம் ஏற்படும் என்பதாதியான சந்தேகங்களேயாம்.

வியாபார விஷயமாக ஒருவன் கல்கத்தா (Calcutta) நகருக்குச்சென்ருன் என்று வைத்துக்கொள்வோம். அவன் அவ்விடம் போனதும் வெள்ளியின் விலையை விசாரித்ததில் தகுந்த லாபம் கிடைக்குமென்று தெரிந்து தன் எஜமானுக்கு இவ்விடத்தில் வெள்ளி விலை குறைவாக இருப்பதால் இரண்டாயிரம் ரூபாய் தந்தி மணியார்டாராக அனுப்பினுல் வேண்டிய ஏற்பாடுசெய்து மறுபடியனுப்புவதாக தந்தியொன்று வந்தது. அப்போது எஜமானன் இரண்டு ஆயிரம் ரூபாயையும் எடுத்துக்கொண்டு போஸ்ட் ஆபீஸில்சென்று போஸ்ட்மாஸ்டரிடம் பணத்தைக் கொடுத்து தந்தியைக் கொடுத்தான். அப்பொழுது 15 நிமிடத்திற்குள்ளாக பணம் பெற்றுக்கொண்டேன். ஏற்பாடு செய்துவிட்டு வந்து சேருகிறேனென்று பதில் தந்தியும் வந்தது. இவன் கொடுத்த ரூபாய் தன்கண்முன்னிற்கும்போதேபெற்றுக்கொண்டதாகதந்தி வந்துவிடுகிறது. என்பது போலவே நாம் அன்னிய ஸ்தலத்திலிருக்கும் நமது முன்னோர்களை உத்தேசித்து நானுவித பக்ஷிய போஜ்ஜியங்களுடன் "ஜனார்த்தனப் பிரீயதாம்" என்று பகவானிடம் சிராத்த கர்ம்மத்தை ஒப்புவிக்கிறோம். அக்கர்ம்மத்தின் புண்ணிய பலனுனது பகவத் சக்தியால் நமது பிதுருக்கள் வசித்து வரும் தேசாராஜாதிகாரிகளுக்கு உடன் அறிவிக்கப்படுகிறது. அப்போது அவர்கள் நாம் அன்னமாகக் கொடுக்கும் வஸ்துக்கள் யாவும் நம் பிதுருக்களின் அக்கால நிலைமைக்கு தக்கபடியாக பாகம் செய்துகொடுக்கப்படுகிறது. எவ்வாறெனில், உதாஹரண

மாக ஒருவனை கடனுக்காக ஜெயிலில் வைத்தோமேயானால் அவனது ஆகாரத்துக்காக கொடுக்கவேண்டிய ரூபாயை ஜெயில் அதிகாரிகையிலேயே கொடுக்கிறோம். அவனதைப் பெற்றுக்கொண்டு நாம் அனுப்பிய ஜயில் புள்ளியாரென்றும், அவன் எவ்வித ஆகார நியமமுள்ளவனென்றும் விசாரித்தறிந்து, அவனுக்குத் தக்கபடி ஆகாரம் கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறான். அதுபோலவே "ஜனார்த்தனப் பிரீயதாம்" என்றுநாம் செய்த சிராத்த கர்ம்மத்தின் புண்ணிய பலனும் நம் பிதுருக்கள் வசித்துவரும் லோகாதிகாரிகளிடம் போய்ச் சேருகிறது. அவ்வதிகாரியும் அதை நம் பிதுருக்கள் பாபகர்மத்தின் பயனாக சர்ப்பம், பசுபட்சி முதலான எவ்வித ரூபத்திலிருக்கிறார்களோ அவர்களுக்குளெவ்வித ஆகாரம் உசிதமோ அவ்விதமே ஸர்ப்பத்திற்கு தவளை, பசுவுக்குப் புல், என்றபடி ஆகாரம் கொடுக்கப்படுகிறது. நாம் ஜெயில்புள்ளிகளுக்கு ஆகாரத்திற்கு பணம்கொடுத்தாலும் அவன்உண்ணுவதைப் பார்ப்பதில்லை.

அதுபோல நாம் "ஜனார்த்தனனிடம்" ஒப்புவித்த தர்ம்ம பலனை எவ்விதம் நமது முன்னோர்கள் உண்கிறார்கள் என்பது பார்க்கவேண்டுமென எண்ணுவது உசிதமில்லை. நாம் கொடுக்கக் கடமைப்பட்டவர்களே தவிர அதைத் தக்கவிதத்தில் உபயோகம் செய்யவேண்டிய பொறுப்பு அதிகாரிகளின் கர்ம்மம். கர்ம்மபலனை நாம் ஈசனிடம் ஒப்புவித்துவிட வேண்டும். மேல்செய்யவேண்டியது அவரது ஆக்ஞைப்படியாம் என்பதில் என்ன சந்தேகம் வந்தது? யுக்திவாதிகள் இதற்கு என்னபதில் அளிப்பார்கள். இவ்விதம் பகவானிடம் அர்ப்பணம்செய்த சிராத்தகர்ம்ம பலனால் பிதிருக்கள் சந்தோஷமடைகிறார்கள், அதனால்நமக்கு இகத்தில்பல வித குணங்கன் உண்டாகின்றனவென்பது சாஸ்திர சித்தாந்தம்.

நமது மதம் விசுவாசத்தில் நிலையாக நிற்கின்றது. பணம் கொடுத்து ரசீது வாங்குவதும் விசுவாசக் குறைவினாலேயாம். நம்பிக்கையுள்ளவர்களிடம்ஆதாரம் கேட்காமலிருப்பது சகஜமாம். கேவலம் மனிதனுக்கே இவ்வித நம்பிக்கையானது பரஸ்பரம் சில சமயம் உண்டாவது சகஜமாகவிருக்கும்போது சர்வபரிபூரணனும் ஸத்யரூபியுமான பகவானிடம் யார் அவிசுவாசம் கொள்வார்கள். அதனாலேயே **विश्वासः फलदायकः** என்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன.

சிராத்த கர்ம்மம் மிகமேன்மைபெற்றதென்று பாரதம் அசுவமேதபர்வத்தில் வியாச மஹரிஷி உபதேசித்திருக்கிறார். "ஜமதக்னி" என்ற ரிஷி ஒருநாள் பிதுரு சிராத்த தினத்தில் கிரக சுத்திசெய்து நவபாண்டத்தில் சுத்தமாக பிதுருக்களுக்கென்று பசுவின் பாலைக்கறந்து வைத்திருந்தார். அதை "கோபதேவதை" வந்து கவிழ்த்துவிடவே அதைக்கண்ட ரிஷி சிராத்த தினத்தில் கோபம் கூடாதெனவென்று எண்ணி "கோபதேவதையை" மன்னித்து விட்டு சிராத்தம் செய்தார். அதனால் பிதுருக்கள் கோபமடைந்து நீ எங்களுக்காக வைத்திருக்கும் பாலைக்கவிழ்த்துக் கெடுத்தவனை சிட்சிக்காமல்விட்ட தோஷத்தால் நாங்கள் சிராத்தத்தை கிரகிக்கவில்லை,உனக்குபூமியில் கிறிப்பிள்ளையின்ஜன்மம்வரட்டுமென்று சபித்தார்கள். அப்போது ரிஷி நடுங்கி சாபமோசன காலத்தைக்கேட்டபோது, தர்ம்மபுத்திரர் "ராஜசூயயாகம்" செய்து முனிகளுடன் சபையின்கண் வீற்றிருக்கும்போது, நீ அவ்விடம் சென்று "அதிதி போஜனத்தால்" இல்லறதர்ம்மத்தைஒழுங்காய்நடத்தின ஒருபிராம்மணகுடும்பத்தைப்புகழுவாய். அப்போது சாபமோசனம் வரும் என்று அனுக்கிரகம் செய்தார்கள். இதனுல் சிராத்த கர்ம்மமானது எவ்வளவு பயபக்தி விசுவாசத்துடன் செய்யவேண்டியதென்று வருகிறது பாருங்கள். தவிர பிதுரு கர்ம்மத்தின் தோஷத்தால், அல்ப்பாயுசு, தாரித்திரியம், சந்தான நாசம், ரோகம் இவைகள் வந்துவிடுமென்றும் சரியான கல்ப்ப நியமத்துடன் பிதுரு கர்ம்மம் செய்யப்பட்டால், அகால மரணத்தையும், ஜெயிக்கலாமென்று வியாசர் பாரதத்தில் வெளியிட்டு இருக்கிறார்.

பிராணிகளுக்குப் பிராண பயத்தைபோல பெரிதானபயம் வேறொன்றுமில்லை அதைத் தடுக்கத்தக்க உபாயம் சிரார்த்த கர்மானுஷ்டானம் என்கிறார்கள். "சந்தனுராஜன்" தனதுசத்கர்மத்தால், சுவர்க்க மடைந்தபிறகு, அவரது புத்திரன் "பீஷ்மர்" ஒருக்கால் சிராத்தம் செய்தார். அதில் பிண்டத்தை கையிலெடுத்து "சந்தனுவுக்கு" க்கொடுக்கவே அவர் அப்போது பூமியினிடம் பிண்டத்தை யாசித்தார், இதன் காரண மென்னவென்று "பீஷ்மர் ஆலோசித்து "சிராத்தகல்ப்பம்" தவறியிருப்பதாக அறிந்து விதிப்படி தர்ப்பையை பூமியில்பாப்பி பிண்டத்தை யதன்மேல் கல்ப்பப்படி வைக்கவே "சந்தனுவும்" திருப்தியடைந்தார், பிறகு அவர் ஹேபுத்திரா நீராஜ னுனதினுல் சிராத்த கல்ப்பத்தை நீ தப்பிநடந்

தால் உனது பிரஜைகளும் விதிதப்பி நடப்பார்கள் அதனால் நீ இப்போது விதிப்படிசெய்த்து நன்றாய் விட்டது உனக்குவேண்டிய வரம்பெற்றுக்கொள், என்று சொல்லி உனக்குஎனது கிருபையால் மிருத்தியுபயம் இல்லாமலிருக்கட்டும் உன்னிஷ்டப்படி வேண்டுமென்றகாலத்தில் மிருத்தியு வரட்டுமென்றும் வரமளித்துச் சென்ருர். இந்த காரணத்தினாலேயே "உத்தராயண" காலத்தை எதிர்பார்த்து சரதல்பத்தில் சிறிதுகாலம் "பீஷ்மர்" சயனம் செய்திருந்தார் என்று மஹாபாரதம் சொல்லுகிறது. மாதா பிதாக்கள் ஜீவனேடிருக்கும் காலத்தில் அவர்களை நன்கு ரட்சித்துவருவதுதான் புத்திரனின் கடமை. மரணத்திற்கு பிறகு, சிராத்தம் முதலிய பிதுரு கர்ம்மங்கள் அவர்களைக் கருதிச்செய்வது அவசியமில்லை என்பது குதர்க்கவாதிகளின் முக்கிய கொள்கை "ஆரியசமாஜி" கள் இதையே முக்கியமென வாதித்திருக்கிருர்கள், இவர்களின் கொள்கையை சாஸ்திரமானது கண்டித்து நுட்பமான சாரத்தை வெளியிட்டிருப்பது யாதெனில்,

> जीवतोर्वाक्यकरणात् क्षयाहे भूरिभोजनात् ।
> गयायांपिण्डदानाच्चात्रिभिःपुत्रस्यपुत्रता ॥

மாதா பிதாக்களின் ஜீவதசையில் அவர்கள் சொற்படி நடப்பதாலும், மரணத்திற்குப்பிறகு விமர்சையாக பிதுருக்களைக் கருதி அன்ன சிராத்தம் செய்வதாலும், "கயாக்ஷேத்திரத்தில்" பிண்டதானம் செய்வதாலும் இம்மூன்றுகாரணங்கள் பற்றி புத்திரன் என்ற புகழ் அடைகிருன். இதில் மரணத்திற்குப்பிறகும் பிதுரு திருப்தியாக சிராத்தம் பிண்டதானம் இவைகள் செய்கிறவனே புத்திரன் எனப் புகழப்பட்டிருப்பதால் எவ்வளவு தெளிவாக சிரார்த்த கர்மத்தைச் செய்யும்படி சாஸ்திரம் உபதேசித்திருக்கிறது பாருங்கள். இக்கருத்தையே, "ஸ்ரீராமனும்" வனத்தில் "தசரதருக்கு" பிண்டதானம் செய்து காண்பிவித்திருக்கிருர். தவிற அவரே, காக்கைக்கு சிராத்தத்தில் பிண்டம் கொடுப்பதும் அதை அப்பட்சி தொடாதகாலத்தில் பிதுருக்களின் மனோரதம் ஜீவனுள்ள காலத்தில் பூர்த்திசெய்யப்படவில்லை என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்றும் வரம் அளித்திருக்கிருர்.

இம்மாதிரி வேத, சாஸ்திர, புராணுதிகளும், ரிஷிகளும் அவர்களின் அநுஷ்டானங்களும், அதையனுஸரித்து 'ராஜ

ரிஷிகள்" பரம்பரையாக அனுஷ்டித்துவரும் "பிதுரு சிராத்த',
கர்மத்தை, சிரத்தா, பக்தி, விசுவாசத்துடனும், பூர்ண நியமத்
துடனும், அனுஷ்டித்து வரவேண்டியதுதான் ஆஸ்திகர்களின்
கடமை. அதுவே அபரிமித மகிமை. சுபம்.

கர்ம்மமும், பலனும்.

नियतं कुरुकर्मत्वंकर्मज्यायोह्यकर्मणः। शरीरयात्रापिचतेनप्रसिद्धयेदकर्मणः॥

ஹே அர்ச்சுன! நீ நித்யகர்ம்மத்தை நியமமாகச் செய்வா
யாக. கர்ம்மநிஷ்டையைச் செய்யாமலிருப்பதைக் காட்டிலும்
கர்ம்மத்தைச்செய்வதே மேலானது. நீ கர்ம்மத்தை விட்டிருந்தால்
உனக்குசரீரசம்ரட்சணையும் சித்திக்கமாட்டாதென்றார் ஸ்ரீ கீதா
சாரியாள். இதனால் சரீர ரட்சணத்திற்காகவாவது செய்யவேண்
டிய கர்ம்மத்தைச் செய்துதீரவேண்டுமென்று நிச்சயமாகிறது.

नहिकश्चित् क्षणमपि जातुतिष्ठत्यकर्मकृत् ।

என்றபடி மனிதன் ஏதாவதுகர்ம்மம் செய்யாமல் ஒரு க்ஷணமும்
இருப்பதில்லை. அதில் தனது நியதமான கர்மத்தையே செய்து
வரும் பட்சத்தில் அது மிகவும் மஹிமையாகுமென்பதில் தடை
என்ன. இதனால்நாம்கர்ம்மம்செய்யகடமைப்பட்டவர்களாகிறோம்.
அதன் பலனேவெனில் ஈசனின் கட்டளைப்படி தனியாய் வந்து
சேருகிறது. கர்ம்மபலனை அளிப்பவர் ஈசனும். நமது முன்
னோர்கள் பலனை எதிர்பாராமல் நியத கர்ம்மங்களைச் செய்தேவந்
திருக்கிறார்கள். அதிலும் எவ்வளவோ காலத்திற்கு பிறகுதான்
கர்ம்மபலனை அடைந்தார்களென்பது சரித்திர மூலம் வெளியா
கிறது.

பூர்வத்தில் சூரபத்மாசுரன் பரமசிவனிடமிருந்து வரம் கேட்
டபோது உமது தேஜஸ்ஸைத் தவிர மற்றொன்றினாலும் மரணம்
வரக்கூடாதென்று கேட்டான். இவ்வசுரன், இம்மாதிரி வரம்
கேட்கக் காரணமென்னவெனில், பகவான் தாட்சாயணியை
விட்டுப் பிரிந்து தக்ஷிணாமூர்த்தி வடிவங்கொண்டு நியமநிஷ்டை
யிலிருக்கிறார், இவர் இனி கல்யாணம் செய்து கொள்ளமாட்
டார்' அதனால் சந்தானமும் பிறக்கமாட்டாதென்று தன் புத்தி

சாமர்த்தியத்தால் ஈசனையும் ஏமாற்றவெண்ணி இவ்விதம் வரம் வேண்டினான். அவ்விதமே வரம் பெற்று உலகத்தை இம்சித்து வரவே, தேவர்கள் அதனால் மிகவும் வருந்தி, இவனது வரத்தின் நுட்பத்தை அறிந்துபரமசிவனை விவாகம்செய்துகொள்ளவேண்டி பற்பல முயற்சிகளை வெகுகாலமாகச் செய்துவந்தார்கள். கடைசியாக பகவான் பார்வதியை மணந்தார். பிறகு வெகுகாலம் சென்றும் சந்தானம் உண்டாகாமலிருக்க அதற்காக இன்றும் தேவர்கள் பெரும்முயற்சி செய்து பார்வதியுடன் ரமிக்கச் செய்தார்கள். அவ்விதமும் வெகுகாலம் சென்றும் திவ்விய தேஜஸ்வியான "கார்த்திகேயன்" பிறந்தார். அவரே தேவ சேனாதிபதி என்ற திருநாமம் பெற்று "சூரபத்மாசுரனை" நிக்ரகம் செய்து தேவகாரியத்தைச் செய்து முடித்தார்.

ராவணனுடைய உபத்திரவம் தாங்காமல் தேவர்கள் வைகுண்டபதியை வேண்டினபோது அதற்கு பகவான் நான் "ராமாவதாரம் செய்து காரியங்களை இஷ்டபடி செய்து வைக்கிறேன் ஆனால் அதற்கு இது காலமில்லை காலம்வரும்போதே காரியம் கைகூடிவரும் ஆகையால் காலத்தை எதிர்ப்பார்த்திருங்கள். என்று தேவர்களை உபதேசித்தனுப்பினார். தேவர்களும் வெகுகாலம்வரை ராமாவதாரத்தை எதிர்ப்பார்த்திருந்தார்கள். கிருதயுகத்தில் பிறந்தவனான ராவணனை திரேதாயுகத்திலே ராமாவதாரம் செய்து ஜெயித்தார். அதுபோலவே பகவான் தேவர்களுக்கு கிருஷ்ணாவதார காலத்திலும் உபதேசித்தார். அர்ச்சுனன் சுபத்திரையை விவாகம் செய்துகொண்டபிறகு பகவானிடம் "தர்மபுத்திரன்" தன் ஞாதிகளின் சங்கடநிவர்த்தியைவேண்டினபோதும் காலத்தைச் சிறிது எதிர்பார்த்து வாருங்களென்று உபதேசித்தார்.

இம்மாதிரியான சரித்திரங்களினால் எவ்வளவுகாலம் சென்றாலும் செய்த கர்ம்மத்துக்கு பலன் நிச்சயமாகவந்து கூடுமென்பது உண்மையாகிறது. பலனும் ஈசனிஷ்டப்படியே வந்துசேருமென்மது சித்தம். பகவான் தேவர்கள் வேண்டினபோதே அவதாரம் செய்து துஷ்டர்களை உடனே நிக்ரஹம் செய்திருந்தால் ஏன் தேவர்கள் காலத்தை எதிர்பார்த்திருந்து மிகக்கஷ்டப்பட வேண்டும் என்றால் कर्मफलदाता ஈசனானபடியால் ராவணாதிளின் மஹிமையான தவத்திற்கு பலன் அளித்துத்தரவேண்டியது

பகவானின் கடமையானபடியாலும், தவத்தால் புண்ணியம் தற்காலம் ஏறியிருந்தாலும், அப்போது பகவான் எவ்வித முயற்சி எடுத்திருந்தாலும் காரியம் சாத்தியமாக வாமாட்டாது. ஆனல் காலக்கிரமத்தால் வாத்தின் மகிமையால் அகங்காரம் கொண்டு அக்கிரமம் செய்வார்கள். அப்போது புண்ணியம் குறைந்துபாபம் கூடிவரும். அச்சமயம் வெகுசுலபமாக வெல்லலாமென்றதத்துவத்தின் உட்கருத்துடனேயே, காலத்தை எதிர்பார்க்க உபதேசித்தார். இதுபோலவே நாம் செய்துவரும் ஒவ்வொரு கர்ம்மத்திற்கும் பலன்கள் தாமசமாக வருவதற்கும், சீக்கிரமாக வருவதற்கும் நுட்பமான ரகசியம் இருந்தேவருகிறதென்று அறிந்து கொள்வோமாக. தேவர்கள் பகவானிடம் உத்திரவின்படியே காலத்தை எதிர்பார்த்தும் பரமகஷ்டத்தையடைந்துவந்த காலங்களிலும் தாங்கள் செய்யவேண்டியர்ம்மம் (தியானதி) முதலியவைகளைச் சிறிதும் விட்டவர்களில்லெஅவர்களின் விடாமுயற்சியே வெற்றியை ஈன்றதாம், நாம் செய்துவரும் கர்ம்மங்களுக்கு பலதாதாஈசனுனபடியால் தகுந்த காலத்தில் நமக்குப் பலனளிக்க பகவான் தயாராக இருக்கிறுர். பலனை எதிர்பார்ப்பது உபயோகமற்றதாம்.

நாம் ஒரு கர்ம்மம் செய்யும்போது அக்கர்ம்மம் தெய்வ சக்திக்குள்ளடங்கியே நிற்கிறது. அந்த தெய்வமானது இன்ன சமயம், இன்னமாதிரியானபலனை இவ் வழியாகத்தருமென்று எதிர் பார்த்திருக்க நியாயமில்லை. தெய்வச்செயலையறிந்தவர்யாருமில்லை.

உதாரணமாக அமிருதம் புசிக்கக்கருதி பாற்கடலை தேவாசுரர்கள் கடைந்தபோது அதிலிருந்து விஷம், இலட்சுமி, சந்திரன் உச்சைசிரவசு என்ற குதிரை, ஐராவதம் என்ற யானை, கல்பதரு, காமதேனு, சிந்தாமணி இவைகள் உண்டாகுமென்ருவது, அமிருதம் வந்தபிறகு கலகம் உண்டாகுமென்ருவது, சிறிதும் நினைத்தவர்களில்லை. இவைகள் உண்டாகாமல் இருக்கவுமில்லை. இந்த தெய்வச்செயலை இந்திராதிதேவர்களும், அறிந்தார்களில்லை, என்ருல் நம்போலுள்ள மானிடர்கள் எங்ஙனம் அறியக்கூடும். ஆகையால் தேவர்கள் எவ்வளவு கஷ்டம் வந்தபோதிலும் உத்தேசவஸ்துவான அமிருதம் வரும் வரையில் கர்ம்மத்தை விடாமல் செய்துவந்ததுபோல நாமும் ஸ்வகர்ம்மத்தைச்செய்து வந்தோ

மேயானல் அமிருதத்திற்கொப்பான கர்ம்மபலனையும் அடைவோ மென்பதில் ஐயமில்லை.

ஒரு சரீரசமுதாயத்தில் பல அவயவங்களும், அவைகள் பல பிரவர்த்திகளும், செய்துவர சக்திபெற்றிருக்கின்றன. இச் சமுதாயமும் அவயவங்களும் ஈசனருளால் அதாவதுசெய்கைகளை முறை தவருமல் செய்து வருகின்றன. அவைகளை நாம்ஏவவேண் டிய அவசியமில்லை.

உதாரணமாக ஒருவனுக்கு முதுகில் தினவு உண்டானல் அந்த இடத்தைக்கையானது சூட்சமாய்க் கண்டுபிடித்துதான் செய்யவேண்டிய கர்மத்தைச்செய்து முடிக்கிறது. அதனல் தினவு தீர்ந்து விடுவது போல நாம் செய்யவேண்டிய கர்ம்மத்தைச் செய்து வந்தால் பலனும் அதன்பின்னல் துடர்ந்தே ஈசாநுசரணமாக வந்து சேரும், அதன்றி ஈசனை ஜெயிக்கவெண்ணித்தன் சாமர்த்தியத்தைக் காண்பிப்பது ஆப த்தாகவேமுடியும். ராவணன், ஹிரண்ணியன் முதலியவர்கள் மா ணமில்லாமலிருக்கக்கருதித்தன் புத்திசாமர்த்தியத்தால் ஈசனையும் ஏமாற்றி விடலாமென்று பலவழியான நியாயங்களுடன் வரம் பெற்ருர்கள். அவர்களும்ஈசனிஷ்டப்படியேஉத்தேசித்தகாலத்தில் கொல்லப்பட்டார்கள். கர்ம்மபலமானது ஈசனிஷ்டப்படியாகு மென்று உறுதிகொண்டு செய்யவேண்டிய கர்மத்தை செய்தேதீர வேண்டுமென்று அநுஷ்டித்து வந்த விபீஷணன், பிரக்லாதன், துருவன், பாண்டவர்கள், குசேலர், முதலியவர்களின் சரித்திரங் கள்நம்மை மிக சக்தியுடன் தேற்றி வருகின்றன.

பலன் வாவில்லை என்று செய்யவேண்டிய கர்மமத்தை நிறுத்திவிடக் கூடாது. நமதுதோட்டத்திலுள்ள தென்னமரங்கள் நமக்கு போதுமான பலன்களை கொடுப்பதில்லையென்றுகருதி நாம் அவைகளுக்கு, உறம், தண்ணீர், இவைகளை தகுந்த காலத்தில் போட்டு காப்பாற்ருமல்ப் போனல் அவற்றின் பலன் நமக்கு முற் றிலும் கிடைக்காமல் போவதுடன் அந்தமரங்களும் விருத்தி யடையாமல் அழிந்து விடுகின்றன, என்பதுபோல, இம்மானிட சரீரத்தைப் பெற்று ஏதோப் பிரயத்தனம் சிறிதுசெய்து அதன் பலன் சரியானபடி கிடைக்காததால் அதை நிறுத்த சோம்பேறி யாக விருந்தால் சரீரம் பெரும் வியாதிகளால் அவதிப் பட்டுக் கடைசியில் கெடுதலை யடையும் என்பதும் உண்மை,

கர்ம்மத்திற்கு பலன் அளிப்பவர் ஈசன். ஏனெனில் கர்ம்மத்திற்குஇயற்கையாகபலனளிக்கும்சக்திஸ்தவஸ்ஸித்தமாகவேயுண்டு எவ்விதமெனில் அறிந்தோ அறியாமலோ அக்னியைத்தொட்டால் சுடுவதுபோலவும், ரோகி மருந்தின் குணத்தை அறியாமல் உட்கொண்டாலும் ரோகம் நீங்கிவருவது போலவுமாம். ஆனால் இக்கர்ம்ம பலனை ஈசன் அளிக்கவேண்டியதேனென்றால் கர்ம்மம் அசேதனம் (ஜடம்) அசேதனமான எந்த பொருளும் ஒரு அறிஞரது பிரேரணையாலன்றி தன் பயனைக் கொடுப்பதில்லை.

உதாரணம் அரிசிமுதலிய தானியங்களுக்குப் பசியைத்தணித்து சரீரத்தைப் போஷிக்கும் சக்தியியல்பிலமைந்ததேயாயினும் அத்தானியங்கள் கடையிலிருந்துகொண்டாவது, பானையிலிருந்துகொண்டாவது, பயனளிப்பதில்லை. அறிவுள்ளவனாகிய ஒருவன் அதைப்பாகம் செய்து உட்கொண்டாலன்றி தன் பயனாகிய பசி தீர்த்தலை அது செய்யவில்லை. "பேரீந்து" பித்தத்தை ஒழிக்கும். அது மரத்திலிருந்துகொண்டாவது, கடையிலிருந்துகொண்டாவது தன் பயனைத் தருவதில்லை. அறிவால் அதன் குணத்தையறிந்துண்டவனுக்கே அதன் பயனைத்தரும். இவை பிரத்தியட்சமாம். அதுபோல் கர்ம்மமும் தன்பயனை இயற்கையில் தரும் சக்தியுள்ளதல்ல, மற்றொரு அறிவாளியை அநுசரித்தே கர்ம்ம பலன் நிற்கும். இது ஆத்மா, மனம் சரீரம் இவைகளை சுத்தியாக்கும் இயற்கை குணமுள்ளது. இதனால் கர்ம்ம நாசமும் ஞானமும், மோட்சமும் கிரமமாய் வந்துசேரும். கர்ம்மம் மோட்சம் தரமாட்டாது. நசித்துப்போன அரிசி முதலிய தானியத்தின் பயன் சரீரத்தில் நின்று இன்பம் தருவதுபோல் கருமத்தால்வந்த ஞானமும் மோட்ச சுகத்தை அளிக்குமாம். ஞானமே பரமாத்ம ரூபமானதால் அவரே மோட்சதாதாவாகிறார். இதனால் "கர்ம்மமும் கடவுளும்" மோட்ச காரணப்பொருள்களாம். நிமித்தகாரணமும் துணைக்காரணமுமின்றி காரியம் சித்திபெறுவதற்குமுடியாததால் "கர்ம்மத்தையும், கடவுளையும்" அநுஷ்டித்தே தீரவேண்டும். இதுபற்றியே "ஈசனைக் கர்ம்மபலதாதா" என்கிறார்கள். ஆதலால் ரிஷிகள் நியமித்திருக்கும் கர்ம்மங்களுக்கு பகவானே பலனளிக்கிறார். கர்ம்மங்களுக்குமுக்கியஸாதனமான வேதமந்திரங்களுக்கு அர்த்தம் அறியாதவரை உபயோகமில்லையென்று நவீனர்

களின் அபிப்பிராயம். மந்திரார்த்தம் அறிந்து கொள்ளவேண்டியது அவசியமே, ஆனால் அறியாத விஷயத்தில் உபயோகமில்லை என்பது முற்றிலும் தப்பிதமேயாம். ஏனெனில் சுக்கு அஜீர்ணத்தைவிலக்கக்கூடியது அதையறியாத குழந்தைகளுக்கு மாதாவானவள் அதைப்பொடித்துக் கொடுத்தாலும் அதன் குணத்தைச் செய்யாமல் இருப்பதில்லை என்பது நிச்சயம். அதுபோல முன்னோர்களான ரிஷிகள் ஜன்மலாபத்தின் பொருட்டு கர்ம்ம குணங்களையறிந்து நம்போலுள்ள பின் சந்தானங்களின் சுகபோக சாதனமான வேதோக்த சந்தியாவந்தனாதி கர்ம்மங்களைச் சிறுவயதிலேயே அநுஷ்டிக்க நியமித்திருக்கிறார்கள். இதில் உபயோகப்பட்டிருக்கிற மந்திரத்தின் அர்த்தகுணங்களை அறியாமல் கர்ம்மம் செய்துவரும் சிறுவர்களானபிரும்மசாரிகளுக்கும் கர்ம்மபலன்கட்டாயம் வந்து தீருமென்றுதான் ரிஷிகளின் கொள்கை. ஆனது பற்றியே எட்டுவயதிலேயே வேதோக்த கர்ம்மங்கள் செய்ய நியமித்திருக்கிறார்கள். நாம் இந்த ஸாரத்தை அறியாமலும், ரிஷிகளின் கருத்தை அறியாமலும் முன்னோர்களையே குறைகூறுவதானது புத்தியீனமேயாகும்.

தார்மிகர்களே! நாம் செய்யவேண்டிய கர்ம்மத்தைச் செய்வதற்கும், ஈசன் அதன்பயனை அளிப்பதற்கும் கடமைப்பட்டவர் என்பது நிச்சயமானபடியால் நாம் செய்துவரவேண்டிய கர்ம்மங்களை பலனுள்ளதாகவே உறுதிகொண்டு சிரத்தா பக்தியுடன் அநுஷ்டித்துவர கடமைப்பட்டவர்களாகிறோம்.

மதவிசுவாசமகிமை.

विश्वासः फलदायकः "நம்பிக்கை நலமளிக்கும்" என்றார் வியாச மஹரிஷி.

அபிமானிகளே! நம் தேசத்தில் தற்சமயம் துர்மதங்களின் பிரசாரத்தால் சனாதன தர்ம்மத்திற்குக் குறைவு வந்திருப்பதை யாவருமறிவார்கள். இக்காரணத்தால் சமுதாய சீர்திருத்தக் காரர்கள் சனாதன தர்ம்மத்தைப் பழித்துவருகிறார்கள். இச் செய்கையானது ஒரு தேசத்தில் தரித்திரனொருவனின் நாகரீக

மற்ற வீடு ஒன்று இருந்துவரவே லோகோபகாரிகள் அதை வேண்டிய உதவி செய்து, நாகரீகமாகச் செய்து வைப்பதற்குப் பதிலாக நாகரீகம் குறைந்தவீடு இவ்விடத்திலேயே இருக்கக் கூடாதென்று உள்ளதையும் இடித்துவிட்டதற்கொப்பாகும். நமது சமுதாய பகிஷ்காரிகள் அன்னிய மதத்தில் வைத்திருக்கும் நம்பிக்கையைத் தம் மதத்தில் வைத்துவிட்டால் ஒருக்காலும் சநாதன மதம் க்ஷீணதசையை அடையமாட்டாதென்பது நிச்சயம்.

மதம் க்ஷீணமாவதற்கும் பரிஷ்காரிகளின் அவிசுவாசமேமுக்கிய காரணம் மத விசுவாசமில்லாமல் ஜீவிப்பது மரணத்திற்கொப்பாகும். மத விசுவாசமானது தாய் தந்தையின் விசுவாசம்போலவாம். "சுவர்தந்திரியப்பேய்" பிடித்து நவீன பரிஷ்காரிகள் மதத்தைத்துரோகித்து வருகிறார்கள். நாகரீகமோகம், உத்தியோகம் இவைகளின் ஆசைகொண்டு, சாண்வயிற்றை நிரப்பக்கருதி தன் மதத்தைவிட்டுதுற்மதத்தைக்கைகொண்டுமிருகசுகத்திற்காகபந்தனத்தில் சிக்குண்டு அருமையான மானிட ஜன்மத்தை வீணில் கெடுத்துக்கொள்வது சுதந்திரமின்மையல்லவா? மதத்தைக் கெடுத்துவிட்டால் சுதந்திரம் வந்துவிடுமா? கஷ்டமே வந்துகூடும். ஆகையால் முதலில் மத விசுவாசமும் அதற்கனுகூலமான நடையும் நம்மிடமிருக்குமானால், சுதந்திரம், ஆரோக்கியம் ஆயுள், ஆனந்தம் இவைகள் திட்டமாய் ஏற்படுமென்பது நிச்சயம். மத விசுவாச சக்தியாலேயே நம்முன்னோர்களான ரிஷிகள் ஆரோக்கியாதிகுண சம்பூர்ணதையையடைந்து பிரகாசித்து வந்தார்களென்பது சரித்திர சித்தமான உண்மை, மத விசுவாசமே மகிமைக்குக் காரணம்.

"மனைவி நமது ஜீவனை ரட்சிப்பாள்" "வைத்தியன் நமது ஜீவனைக் காப்பாற்றுவான்" என்றுநம்பிக்கைகொள்ளாதவனுக்கு எவ்விதத்திலும் ஜீவிக்கமுடியாது. யுக்திவாதிகளும் தனக்குநோய் வந்தபோது வைத்தியனை நம்பாமலிருக்கவில்லை. இவ்விஷயத்தில் இவர்களின் யுக்திவாதம் எங்குபோயிற்று? அனீத நடையால்தான் செய்துவரும் கர்ம்மங்கள் யாவும் பயனற்று போவதேயொழிய வேதசாஸ்திரங்கள் ஒருபொழுதும் பொய்யாகமாட்டாது. மத வித்தியாஸமான தப்பித நடையாலேயே அகால மரணம், ரோகம் அனாரோக்கியம், ஆபத்து இவைகள் நம்மிடம் திடவசதிகொண்டி

ருக்கிறன. இம்மாதிரியான அரிஷ்டங்களுக்கு வேதசாஸ்திராதி களின் அவிசுவாசமே முக்கிய காரணமாம். வேனன், ஹிரண்யா சுரன், கம்சன் இவர்கள் மதத்துரோகம், அவிசுவாசம், தப்பித நடை இவைகளினலேயே கெட்டார்கள் என்பது சரித்திர சித்த மான காரியம். சரித்திர விசுவாசமில்லாத மதம் அஸ்திவாரமற்ற கட்டிடம்போலவாம். எச்சமயம் கட்டிடம் இடிந்துவிடுமோ வென்று எப்பொழுதும் மனக்கவலையுடன் கட்டிடத்தில் வசித்து வரவேண்டியதுபோல, வேதசாஸ்திரங்களில் நமக்கு அவிசுவாசம் வந்ததின் காரணமாக, கவலையுடனும், கலக்கத்துடனும், மதத்தில் வசிக்கவேண்டி வந்திருக்கிறது. வேதாதிகளில் அவிசுவாசமானது மதத்தைக்கெடுத்துவிடும், நம் மதத்தைத்தவிற மற்ற மதங்கள் விசுவாசத்தையே முக்கியமாகக் கொண்டிருப்பதால் கவலைக்கிட மில்லாமலிருக்கிறது. வீட்டுமனிதன் அஜாக்கிரதையாக இருந் தால் திருடன் பயமில்லாமல் திருடிச் செல்வான். நாம் அவிசுவா சத்தாலும், அஜாக்கிரதையாலும், குறைகூறுவதாலும் அன்னிய மதஸ்தர்கள் நம் மதத்தில் நிர்ப்பயமாய் பிரவேசித்து நசிக்கச் செய்கிருர்கள். நமது அவிசுவாசமும், அஜாக்கிரதையுமே மதம் க்ஷீணிப்பதற்குக் காரணம். உலகில் விசுவாசமற்ற மதமும் மத மற்ற விசவாசமும், பயனற்றதாம். விசுவாசத்திற்கு மிக சக்தி யுண்டு. குரு, வைத்தியன், தாம் இவர்களிடம் அத்தியாவசிய மாய் விசுவாசம் இருக்கவேண்டும். குருவுபதேசித்த வித்தையில் சிடனுக்கு அவிசுவாசம் வந்தால் பரீக்ஷையில் அவன் ஜயம்பெற மாட்டான். அதுபோலவே வைத்தியனிடத்திலும் அவனது உபதேசத்திலும், அவிசுவாசம் வந்தால் நோய் விலகமாட்டாது. இம்மாதிரியான காரியங்களில் சிநேகிதனைப்போல உபயோகப்படு வது விசுவாசம் ஒன்றுமாத்திரமேயாம். இந்த விசுவாசம் மனித ருக்கு மத விஷயத்தில் அத்யாவசியமாக வேண்டும். நம் சனுதன இந்து மதமானது திரிகால ஞானிகளான மஹரிஷிகள் ஞானக் கண்ணல்ப் பார்த்தெடுத்துத்தந்த தகுந்த திவ்விய ஔடதம் என்று திட விசுவாசம் நமக்குவேண்டும். இதுவே "மதஜீவன்." விசுவாசம் அற்றவன் இகபர சுகத்தை இழந்தவன். நவீன நாக ரீகப் பழக்கமானது சகலத்திலும் யுக்தி வாதத்தைக் கிளப்பிவிட் டது. தத்துவத்தை வெளியிடுவது யுக்தி, யுக்தியால் வெளியா காத தத்துவம் உத்தமமாகாது என்ருலும், எப்பவும் தத்துவங்க

ளுக்கு யுக்தி கீழடங்கியே யிருக்கவேண்டும். தத்துவங்களுக்கு வைபவம் சக்தி, பிரகாசம், இவைகள் மிகவுண்டு. தத்துவத்திற் கடங்காத யுக்தி உபயோகமில்லை. நவீனர்களுடைய யுக்தியானது தத்துவத்தைச் சிறிதும் தொடாமல் நிற்பதால் தத்துவம் வெளியாவதற்கு முந்தியே யுக்தி பலமற்று க்ஷீணித்து விழுந்துவிடுகிறது. இதனால் முன்னிலும் அதிகமாக அவிசுவாசமே உண்டாகிறது. நவீனர்களுக்கு புனர்ஜன்மம், தானம், ஜபம், ஹோமம் இவைகளில் விசுவாசம் சிறிதுமில்லை. நமது வைத்திய சாஸ்திரங்களோ மனிதசரீரசுகம், மணிமந்திர ஔஷதத்தால் வரவேண்டுமென்று உபதேசித்திருக்கின்றன. இதில் யுக்திவாதிகளுக்கு நம்பிக்கையில்லை, ஏனெனில் சிலசமயம் ஜபஹோமாதிகள் செய்தாலும் ரோகி மரித்து விடுகிறானும். இதற்கு

नतु सद्यो विनीतस्य दृश्यते कर्मणः फलम् ।
कालेऽप्यङ्गी भवत्यत्र सस्यानामिव पक्तये ॥

ஒருவிதையை பூமியில் விதைத்தால் உடனே பலன் தருவதில்லை. அந்த விதையின் குணமநுசரித்து காலக்கிரமமாகவே பலன் உண்கிறது. வாழை ஒரு வருடத்திலும், தென்னை எட்டு வருடத்திலும் பலன் தருகிறது. இது விதையின் குணசாரமாகும். அதுபோல ரோகி ஒருவனுக்கு ஜபஹோமாதிகள் பலன் தரவில்லை என்பது அவனது மரண காலகதியின் காரணமெனவறிந்துகொள்ளவேண்டும். சிலவிதைகளைப்போல் காலதாமதத்தில் கர்ம்மபலன் உண்டாகும், நமக்கு தென்ன மரத்திலே இருந்து பலனை அடையவேண்டுமானால் எக்காலத்தில் நமக்கு பலன் ஆவசியமோ அதற்கு 8 வருடத்துக்கு முன்னதாகவே அதை நட்டு வளர்த்துவரவேண்டும். அதுபோல மனித ஜன்மம் அடைந்தவன் பல ஆபத்திற்குள் சிக்கிக்கொள்ளக்கூடுமென அறிந்துகொள்ள வேணும், நமக்கு எக்காலத்தில் ஆபத்தைவெல்ல சத்கர்ம்மபலன்தேவை என்பதை அறியமுடியாததால் அதி பாலியமுதற்கொண்டே (உபநயநம் முதல்) ஜபஹோமாதி சத் கர்ம்மங்களைச்செய்து ஆபத்தனமாக பலனைச் சேகரித்து வைத்துக்கொள்ளவேண்டும். அவ்விதமானல் நோய்வந்த காலத்தில் ஜபஹோமாதி பலன்கள் மிகவும் உபயோகமுள்ளதாகும். இது முன்னோர்களின் அனுஷ்டான

முறையாம். இதை ஆழ்வார் என்றபக்தன் நமக்கு அனுஷ்டித்து அனுபவத்தில் காண்பித்திருக்கிறார். அதாவது "அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேன்" என்றார் ஆழ்வார். தனவான்களை ஏழைகள் தயவாடியனுசரித்து நயப்பதெல்லாம் எதற்காக? தகுந்த சமயத்தில் அவர்களின் உதவி ஏற்படுமென்றல்லவா அதுபோலவேசுவாமின்! கண், காது, நாக்குமூக்குமுதலிய இந்திரியங்கள் தளர்ச்சியுற்று பரிதவிக்கும் காலத்தில் தாங்கள் எனக்குத்துணை புரிவீர்களென்று நம்பிக்கை அடியேனுக்கு நிச்சயமாக உண்டு என்றார் ஆழ்வார். அதற்கு பகவான் என் துணையைப் பெறக்கூடிய அவ்வளவு யோக்கியதையை நீ அடைந்துவிட்டதாகக் கருதுகின்றனையோவென்று கேட்டார். அதற்காழ்வார் அவ்விதத் தகுதி எனக்கு ஏதுமில்லையாயினும் உமது கருணையைக்கொண்டு என்னையும் காப்பீர்களென்று முழு நம்பிக்கையுடனேயே வந்தடைந்தேனென்றார். அதற்கு பகவான் நானப்படி எவருக்கேனும் துணை புரிந்ததை நீயறிவாயோ வென்று கேட்டார்.

அப்போது ஆழ்வார் ஐயன் அகப்பட்டார் பக்தி வலையிலென்று மகிழ்ந்து "அறிவேன் அறிவேன் யானைக்குஅருள் செய்தமையை" என்றார். பகவான் அதற்கு கஜேந்திரனைப்போல நீயும் துன்பப்படும்போது என்னை நினைப்பாயேயானால் அச்சமயம்வந்து ரட்கிக்கிறேமென்றார். அதற்கு ஆழ்வார் "யமன்வந்து இம்சிக்கும்போது அடியேன் உடம்மை நினைக்கக்கூடுமென்ற நிச்சயமென்ன" என்றார். பகவான் நீ என்னதான் செய்வாய் என்று கேட்க, ஆழ்வார் அதற்கு "அப்போதைக்கிப்போதே சொல்லிவைத்தேன்" இதை நீர் ஞாபகத்தில் வைத்திருந்து அந்த சமயம் வந்தென்னை ரட்சித்தருளவேண்டுமென்று தெரிவித்தார். பகவானும் அவ்வாறு அருள்செய்தார். இதனால் நமக்கு ஆபத்துவரும் சமயம் அறியப்படாதபடியால் ஆபத்துக்குதவ தனம் சேகரித்து வைப்பதுபோல ஹோமாதி சத் கர்ம்மங்களினால் பகவத் சினேகமும், நல்லகாலத்தில் முன்னதாகவே செய்து வைத்துக்கொள்ள வேண்டுமென்று மகான்களின் கொள்கை. நமக்கு வந்துகூடும் ரோகாதிகளுக்குக் காரணம் யாதெனில்

जन्मान्तरकृतं पापं व्याधिरूपेणबाधते ।
तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमसुरार्चनैः ॥

என்ற உபதேசித்தால் முன் ஜன்மத்தில் செய்த பாபமே ரோகத்திற்குக் காரணம். அதை விலக்க ஔடதம், தனம். ஜபம், ஹோமம் இவைகள் முக்கியமாம். ஆனல் இவ்விரண்டும் மிகச்சக்தியுள்ளதாம். ரோகசக்தி அதிகரித்து வந்தபிறகுதான், நாம் ஜபாதி சத் கர்ம்மங்களைச் செய்யமுயல்கிறோம். அச்சமயம் ரோகம் சக்திபெற்றிருப்பதால் அதை வெல்ல ஜபஹோமாதிகளுக்கு மிகச் சக்தி கூடிவரவேண்டும். அப்போதுதான் ரோகம் குறைந்து வரும். இதில் புண்ணிய சக்தி குறைந்திருப்பதால் பாபசக்தியிதை விழுங்கிவிடும். இக்காரணம்பற்றியே ஜப ஹோமாதிகள் செய்து வந்தும் ரோகம் விலகாமல் மீதியாய் நிற்கிறது. பாபத்திற்கதிகமாக புண்ணிய விருத்திவரும் வரையில் ஒன்று இரண்டு தடவை அடிக்கடி ஜபாதிகளைச் செய்துவரவேண்டுமென்று மகான்கள் முறையிடுகிறார்கள். இதுவே ரோக சாந்திக்கு தக்கமுறையாகும் நவீனர்களின் யுக்தி ஏன் இதில் செல்லவில்லை. இவ்விதம் மத தத்துவ ரகசியங்களை அறியாமல் எனக்கது விசுவாசமில்லை, இது விசுவாசமில்லை என்று தனக்குத்தானே எஜமானனுகிய அகங்கார மனிதன் ஏன் ஆபத்தில் சிக்கமாட்டான். நமது வேதாதி மந்திரங்களுக்கு மிகச் சக்தியுண்டு என்பதுபிரத்தியட்சசித்தமான காரியம்.

பாம்பு கடித்தவனையும், பிசாசு பிடித்தவனையும், மந்திர சக்தியால் சுகம் பெறச் செய்வதை நாம் தினமும் பார்த்து வருகிறோம். இம்மாதிரி மிகச் சக்திவாய்ந்த வேதாதி மந்திரங்கள், தந்திரங்கள் இவைகளை விசுவாசமாக நம்பாதவன் எக்காரியத்திலும் பயன் பெற மாட்டான் என்பது திண்ணம். இக்கருத்தையே மகான்களும்

मन्त्रे तीर्थे द्विजे दैवे दैवज्ञे भेषजे गुरौ ।
यादृशी भावना यत्र सिद्धिर्भवति तादृशी ॥

வேதமந்திரம், கங்காநதி தீர்த்தம், பிராமணன், தேவன், சோதிடன், ஔடதம் குரு இவ்வேழு வஸ்துக்களிலும்,மனிதனுக்குஎவ்வளவு நம்பிக்கை உண்டாகிறதோ அதற்குத்தக்கபடிபலனும்வருகிறது என்றார்கள். இவ்வேழு வஸ்துக்களும் சனதன மதத்தின் ஜீவனும். இவைகளை விட்டவன், ஜீவனை இழந்தவனுக் கொப்பாவான். பிராமணனின் சக்தி இவ்வஸ்துக்களில் அமைக்கப்பட்

டிருக்கிறது. அதனுலேயே நமது முன்னோர்களான ரிஷிகளும் மந்திராதிகளில் மிக விசுவாச நம்பிக்கை கொண்டு தினமும் கை யாண்டு வந்தார்கள். இம்மகிமைபொருந்திய வம்சத்தில் பிறந்த நாம் அவர்களைச் சிறிதும் வெகுமானிக்காமல் அவர்களது உபதே சானுஷ்டானங்களை அவிவேகத்தால் பழிப்பது மகாபாபமாகும். முன்னோர்களின் வேதமார்க்கத்தை விசுவாச பக்தியுடன் கடைப் பிடித் தொழுகுகிறவர்களே, சனுதன தர்மாபிமானிகளாவார்கள். அதுவே மகிமையாம். சர்வேசுரன் மதாபிமானத்தைத் தந்து மகிமை பொருந்த இரட்சிப்பாராக.

சுபம்.

K. S. சங்கரராம சாஸ்திரி.

கடன் கூடாது.

(2-வது பாகம்.)

காமிக வனத்தில் தர்மபுத்திரர் முதலானவர்கள், நித்யகர்மா னுஷ்டானங்களை முடித்துக்கொண்டு கையில் உபஹாரத்துடன் பீஷ்மரிடம் வந்தனர். பூமியில் முடிபடவணங்கி, கைகட்டி வாய் பொத்தி,விநயமாய், தாதா! தாங்களோ குருவம்சத்திற் பெரியார் அஷ்ட வசுக்களின் முந்தினவர், தேவதேவனுன ஜகந்நாதனுக்கு பக்தி செலுத்துபவர், தங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளா ததை மற்றவரிடம் கேட்டுத்தெரிந்து கொள்ள முடியாது. ஆகை யால் மற்றும் ஓர் விஷயம்கேட்கிறேன் சொல்லவேண்டும்.

தர்மபுத்திரர்—இவ்வுலகில் கடன் கொடுப்பவனும் வாங்குபவனும் இல்லாமல் எப்படி இருக்கமுடியும்? பணத்தை விருத்தி செய்யாவிடில் சுகம் எப்படிஉண்டாகும்? வாங்காதவனுக்குக் கஷ்டம் ஏது? விருத்தியில்லாமல், முதல் செலவழிந்துவிடில் இவ்வுலகில் என்னசெய்ய முடியும்? வாங்கினவன் கொடுக் காமல்இறந்தால் கடன் கொடுத்தவன் என்னசெய்கிறன்?

பீஷ்மர்—தர்மப்பிரிய! கேளும் முன்பு நாரதர் என்னிடம் கருணை புரிந்து, புண்யமாயும், ஆயுஸ்ஸைக் கொடுக்கக்கூடியதும், எல்லா பாபத்தையும் போக்கத்தகுந்ததுமான இச்சரித்திரத் தைச் சொன்னுர்.

தர்மர்—கவனமாயிருக்கிறேன். சொல்லுவேணும்.

பீஷ்மர்—தானம் கொடுத்தலால் தனவானும், பிறருக்குதவி புரியாததால் தரித்திரனும், பிறக்கிறான். புண்யசாலிகளுக்கு நல்வழியில் கொடுத்துதவ விருப்பமும், பாபிகளுக்கு தானத்தில் வெறுப்பும், புண்யபாபங்களால் உண்டாகிறது. மேலும், கடன்வைத்த பிதா சத்துரு, அன்னமளித்த பிதா ஸுஹிருத், கீழ்படிந்து நடக்கும் மனைவி, பதிவிருதையான ஸகோதரீ, பெண், படிப்புள்ள மகன், சிநேகிதன் இவைகள் நல்வினைப் பயன்கள். கடன் வாங்கினவன், எப்பொழுதும் துக்கமுள்ளவனே. கொடுக்கிறவன் சுகப்படுகிறான். இங்கு மட்டிலுமல்ல. வானகத்திலும் வாழ்த்தப்படுகிறான்.

தர்மர்—அப்படி யாராகிலும் சுகம் பெற்றார்களா?

பீஷ்மர்—அடைந்திருக்கிறார்கள். அக்கதையை கேளும், அது பாபங்களைப்போக்கும் வைராக்கியத்தையுண்டுபண்ணும், பல பேர்களால் இதற்குமுன் கேழ்க்கப்பட்டிருக்கிறது.

தர்மர்—தயவுசெய்து அதை அனுக்கிரகிக்கவேண்டும்.

பீஷ்மர்—முன் கிருதயுகத்தில், கௌசிகன் என்றொரு பிராமணனிருந்தான். அவன் பந்துக்களிடம் பிரியமுள்ளவன். எல்லா சத்கர்மங்களுடனும் கூடினவன். ஆசாரமுள்ளவன் ஐச்வர்யமுள்ளவன். அநேக புத்திரர்களுள்ளவன். தர்மங்களைக்கேட்டவன். அதிகமாய் அளிப்பவன். அவன் தன் வித்தையினாலும், பயிரிடுதல் முதலானதினாலும் தனத்தை ஸம்பாதித்தான். தர்ம வட்டியினால் அவனுக்கு ஆயிரம் லக்ஷம் ரூபாய்கள் பெருகின.

தர்மர்—பூர்வ ஜன்ம புண்யம் பலித்ததுபோலும்.

பீஷ்மர்—அவனுக்கு ஸத்யசீலன் என்ற ஓர்தோழனுண்டு. ஆனால் அவன் மிகவும் ஏழை. பல மக்களுள்ளவன். சரீரத்தாலும் இளைத்தவன். ரோகமுள்ளவன்.

தர்மர்—ஸத்யசீலன் எப்படி ஜீவித்தான்?

பீஷ்மர்—கௌசிகனிடம் கடன் வாங்கியே பிழைத்தான்.

தர்மர்—எதற்காக கௌசிகன் கடன் கொடுத்தான்?

பீஷ்மர்—கௌசிகன், தர்மாத்மாவானபடியினாலும், தனவானானபடியினாலும், ஸத்யசீலனுடைய நிலைமையைக்கண்டு, ஸ்நே

கத்தாலும், விருத்தியை தர்மமாய்க்கொண்டும், கொடுத்து விட்டான்.

தர்மர்—பிறகு என்ன நடந்தது?

பீஷ்மர்—ஸத்யசீலன், வாங்கின தனத்தைக் கேட்டும் கொஞ்சங் கூடத் திருப்பிக்கொடுக்கவில்லை. இப்படியேபலகாலம் சென் றது. அந்தகாலமும் கிட்டிற்று. நமனுலகிற்கு விருந்தாளி களாக வந்தனர். யமதூதர்களால் தர்மராஜனுக்குஅறிமுகம் செய்யப்பட்டனர்.

(ஸம்யமினி பட்டணம் தர்மராஜ ஸபை.)

கௌசிகன்—(எழுந்து வணங்கி) தர்மராஜனே! இதோ எதிரில் நிற்கிற ஸத்யசீலன் பூவுலகில் வாங்கினதைத் திருப்பிக் கொடுக்காதவன், செய்த நன்றியற்றவன், உலகத்தாரால் தூஷிக்கப்படுவன், சொல்லுறுதி அற்றவன். என்னிடம் கடன்வாங்கினதைக் கொடுக்காமல் தங்களுலகிற்கு வந்து விட்டான். அரசனிடத்திலும், திருடர்களிடத்திலும், அயோக்கியர்களிடத்திலும், இருந்து காப்பாற்றின தனத் தைக் கொடுக்கும்படி பலதடவைகளில், மனிதனைத் தடைப் படுத்தியும் (Warrant) அவமானப் படுத்தியும், தாததினுல் நான் ஏழ்மையானேன். என்மனைவிக்கு நல்ல ஆடைவாங்கிக் கொடுக்கவில்லை. அணிகள்செய்து போடவில்லை. என் அரு மைப் புதல்வர்களுக்கு ஆபரணங்கள்பூண்டு, கண்டு களித் தேனில்லை. என் வேலைக்காரர்களுக்கும் போதுமான பரி சளிக்கவில்லை, இவ்வளவு சிக்கனமாய் சேமித்த தனத்தைப் பெற்றுக்கொண்டு இந்த ஸத்யசீலன் இங்கேவந்துவிட்டான். ஹே ஸூர்யபுத்திரரே, நான் என்னசெய்வேன், இவருடைய வேஷத்திலும், வார்த்தையிலும், கார்யத்திலும், நம்பிக்கை செய்யவேண்டாம், "பசுமுகமுள்ள புலி" இவன். என்குடும் பமே இவனுல் அழிந்தது. எப்பொழுது கேட்டாலும்'இல்லை' என்று சொல்லக் கூடியவன் என்றும், இன்றும் பல வாறுகவும், சொன்னுன்.

ஸத்யசீலன்— ஹே தேவனே! நான் மகாபாபம் செய்தவன். பாபம்செய்யவே உண்டானவன். என் வசனத்தை யார்கேட் பார்கள்? ஆயினும் தங்கள் முன்னிலையில் விண்ணப்பம் செய்து கொள்கிறேன். பாபியான எனக்கு அநேகபுத்திரர் கள் உண்டானுர்கள். இவர்களைக் காப்பாற்ற கௌசிகனி

டமிருந்து கடன்வாங்கினேன். மகசூலினல் கடன்கொடுத்து விடலாமென்று உத்தேசித்தேன். அந்த காலத்தில் அதிக காய்ச்சலினுலும்,பேய்ச்சலினுலும்,அரசர்கள் வரிகளினுலும், திருடர்களினுலும் உலகத்திற்கு அதிகபீடை ஏற்பட்டது. ஸந்நிபாத ஜ்வரம் முதலியவைகளால், உலகத்தில் கலக்கமும், விளைவுகுறவைவும்,பசியினுல்கிராமபீடையும்,அரசர்கள் உபத்திரவமும் ஏற்பட்டது. வீடு நிலங்கள், அகன்றது. புத்திரர்கள் தேசாந்திரம் சென்றனர். எனக்கும்ஸஹிக்கமுடியாத வியாதி வந்தது. சில மக்கள் இறந்தன. பெரியதானவீடும் தீக்கிரையாயிற்று. பசுக்களைத்திருடர்கள் கொண்டுபோய்விட்டார்கள். காலத்தில் மழைபெய்யாததினுல் பயிரிடவும் முடியவில்லை. தீர்வை செலுத்தமுடியாததினுல் வண்டி, காளைமாடு குதிரை 'படி ஆள்' முதலியவைகள் அரசனுல் கைப்பற்றப்பட்டன. இச்சமயத்தில் பிச்சையெடுப்பதற்கும் வியாதியாயிருந்ததால் முடியவில்லை. இந்த சமயத்தில்தான்தேவனே! தங்கள் படர்கள் பயங்கரமான ரூபத்தோடு, கயிறுகளால் பலமாகக்கட்டி இங்கு இழுத்துவந்தார்கள். என் செய்வேன். இங்கும் கௌசிகன் பாதிக்கிறுன். யான் ஒன்று நினைக்க தெய்வமொன்று செய்கிறது. ஸூர்ய குமாரரே! தாங்களே யோஜனை சொல்லுங்கள். நானே இளைத்தவன் தீனன். கட்டவும் துணியற்றவன். உலர்ந்த நெஞ்சும் பஞ்சடைந்தகண்ணும், அதிதுக்கியாயும், பயங்கானுயும் பசியினுல் மெலிந்தவனுயும்தங்கள் சேவகர்களால் மிகவும் வாட்டப்பட்டவனுயுமிருக்கிறேன். இந்த கடனிலிருந்து எப்படி விடுதலையடைவேன்? பூமியில் எனக்குத் தோழனுயிருந்த கௌசிகன் இப்பொழுது தேவகணங்களாலும், அப்ஸரஸ்திரீகளினுலும் கொண்டாடப்பட்டு தங்களுக்கருகில் பிரகாசித்து வருகிறுர். முன்புஎன்னிடமிருந்த பிரீதி இப்பொழுதுமாறுதலாயிருக்கிறது. காட்டுத்தீ எரியும்பொழுது காற்றடித்தால் தீ விருத்தியடைகிறது. அதே காற்று சிறு தீபத்தில் பட்டால் அணைத்து விடுகிறது. ஆகையால் இளைத்தவன் எல்லோர்க்கும் எளியோனுகிறுன்." என்று சொன்னுன்.

தர்மராஜா—தன்னிடம் வந்த இருவர்களையும் மற்றுமுள்ளவர்களையும் பார்த்து தனமுள்ளவன் கடன் கொடுப்பதாலும், ஸத்

பாத்திரத்தில் தானம் செய்வதாலும், புவியிலும் (பூமி) திவியிலும் (சுவர்க்கம்) பூஜிக்கப்படுகிறுன், தனத்தினுல் பந்துக்களேயும், அதிதிகளேயும், இன்சொல்லாலும் இரக்கத்தாலும் கௌரவிக்கிறுன். அதனுல் கீர்த்தியும் புண்ணியமும் உண்டாகிறது. புண்ணியத்தால், சுவர்க்கமும், சுவர்க்கவாஸத்தால் நல்ல பிறப்பும், வேதாந்த விசாரமும் ஒப்புயர்வற்ற நித்யானந்தமான மோக்ஷமும் கிட்டும். கடன்வாங்கினவன், துக்கமுள்ளவனுகவும், நன்றியற்றவனுகவும், எல்லோராலும் நிந்திக்கப்பட்டவனுகவும், துராசாரமுள்ளவனுகவும், காமுகனுகவும், கட்டவும் துணியற்றவனுகவும், கோட் சொல்லுபவனுகவும், துர்மார்க்கனுகவும், ஆகிறுன். பாத்திரத்தில் புண்ணியகாலத்தில் ஈச்வரப்பிரீதியாக தானம் செய்யாததால்ஏழையாகப்பிறக்கிறுன். ஏழ்மைத் தனத்தால் பாபகாரியங்களேச் செய்கிறுன். அப்பாபங்களால் நரகத்தையடைந்து, கஷ்டப்பட்டு மறுபடியும், தர்த்திரனுகப்பிறந்து பாபஞ்செய்து கஷ்டப்படுகிறுன். ஆகையால் இப்பட்டணத்தில் வசிக்கும் பிதிர் தேவதைகளே! மாசற்ற அரசர்களே! கேளுங்கள் பிர்மாமானவர் எனக்கு இந்த பட்டணத்தில் அதிகாரம்கொடுத்து, இம்மாதிரி ஆண்டுவரும்படி உத்தரவிட்டிருக்கிறுர். கடன் வாங்கினவன், கடன் கொடுத்தவனுக்கு புத்திரனுயும், பத்நியாயும், வேலேக்காரனுயும், பசுவாயும் காளேயாயும் பிறக்கிறுன், பிறந்து கடன் தீரும் வரையில் உழைத்தும், ஸம்பாதித்தும் கொடுத்து அவனேவிட்டு விலகுகிறுன், ஆனதினுல் புத்ர தாஸர்கள் கடனின் முடிவில் இங்குவருவதினுல் அல்ப்யாயுஸ்ஸுள்ளவர்களாயும் ஏற்படுகிறது. பிர்மாவின் ஆக்ஞைப்படி நான் ஸ்வதர்மத்தோடு இவ்வுலகை பரிபாலித்துவருகிறேன். என்றுகூறிமுடித்தார்.

பீஷ்மர்—தர்மபுத்ரா! இதையறிந்து புத்தியுள்ளவன் கடனுளியாகாதிருப்பான். அவனுக்கு எங்கும் சுகமுண்டு. புண்யலோகங்களே அடைவான். இந்த சரித்திரம் புண்யத்தைக் கொடுக்கும். பாபத்தைப்போக்கும். கடனேயும் நீக்கும். ஆகையால் நீங்கள் ஸ்வதர்மத்தோடிருப்பதால் க்ஷேமத்தையே மேன்மேலும் அடைவீர்கள் என்று ஆசீர்வதித்து, விடைகொடுத்தனுப்பினுர்.

"கிருஹ்யக்ஞ" வீ. உமாமகேச்வரசாஸ்திரி.

சந்தாநேயர்களுக்கோர் விக்ஞாபனம்.

வருகிற தை-மீ 2உ (15—1—31) குருவாரம் முதல் அடுத்த 16 வது வருஷத்திய ஆரம்ப ஸஞ்சிகை வெளிவரும். நாளது மார்கழி மாதத்தோடு வருஷச்சந்தா பூர்த்தியான நம் சந்தாநேயர்கள் அடுத்த 16 வது வருஷத்திற்காகச்செலுத்தவேண்டிய சந்தாத் தொகையை முந்தியே மணியார்டர் மூலம் அனுப்பிவிட்டால் ஷை வி. பி. செலவு லாபமாயிருக்கும். அவ்விதமனுப்பாவிட்டால் ஷை வருஷ ஆரம்ப ஸஞ்சிகையை அதின் வருஷச்சந்தாவிற்கு வி. பி. மூலமாய் அனுப்பப்படும் அப்பத்திரிகையைத் திருப்பாமல் பெற்றுக்கொண்டு ஆதரிக்கவேணுமாய்க்கோருகிறோம். வி. பி. யைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாதவர்கள் வீண்செலவை ஏற்படுத்தி நஷ்டம் வைக்காமல் முன்னமேயே தயவு செய்து தெரிவிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பத்திராதிபர்.